# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

**ஒக்ரோபர் - டிசம்பர் 2018**



கட்டுவானையில் பாதுகாவலிலான மரணத்திற்கு எதிரான போராட்டம் - புகைப்பட அனுசரணை - *www.hirunews.lk*


INFORM Human Rights Documentation Centre

www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை **ஒக்ரோபர் - டிசம்பர்** 2018

© INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம் 2018

கொழும்பு, இலங்கை

## உள்ளடக்கப்பட்ட விடயங்கள்


**அ.** வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் செயலார்வலர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்

**ஆ.** கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராகத் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள்

**இ.** ஏனைய அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள்

**ஈ.** அரசியலமைப்பு சதிப்புரட்சியின் பின்னரான அடக்குமுறைகள்


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990,இல் இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது .குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது .உள்ளூர் ,தேசிய ,சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும் ,அறிக்கைகளை வெளியிடுவதிலும் ,அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது . படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது .தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது . இலங்கையில் கொழும்பை மையமாகக்கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு ,உள்ளூர் செயற்பாட்டாளர்கள் ,குழுக்கள் வலைப்பின்னல்களுடனும் ,பிராந்திய )ஆசிய (சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது*

# உள்ளடக்கங்கள்

முறைமையியல் ........ 1

நிறைவேற்றுச் சாராம்சம் ........ 1

அ. வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் செயலார்வலர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் ........ 3

1. TIDஇனால் செயலார்வலர் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார் ........ 3

2. TIDஇனால் செயலார்வலர் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார் ........ 3

3. TIDஇனால் அரசியல் கட்சிப் பேச்சாளர் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார் ........ 4

4. மாவீரர் நினைவுதினம் குறித்து இராணுவத்தின் எச்சரிக்கை மற்றும் கரிசனை ........ 4

5. திலீபன் நினைவுதின அமைப்பாளர் TIDஇனால் வரவழைக்கப்பட்டார் ........ 4

6. வட மாகாண சபை உறுப்பினரும், 4 இளைஞரும் கைதாகினர் ........ 5

7. நினைவேந்தல் நிகழ்வொன்றுக்கு தடைகள் ........ 6

8. நினைவுகூரல் நிகழ்வொன்றின் மீது தாக்குதல்கள் ........ 7

9. உண்ணாவிரதப் போராட்டமொன்றை நிறுத்துமாறு தடுத்து வைக்கப்பட்டவரின் மனைவியை பொலிஸார் நிர்ப்பந்தித்தனர் ........ 8

ஆ. கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராகத் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ........ 9

10. தமிழ் இதழியலாளரை இலக்குபடுத்துவதை TID தொடர்கின்றது ........ 9

11. 'இந்து' நிருபரை ஊடக அமைச்சர் இலக்குப்படுத்தினார் ........ 10

12. கடற்படை ஆளணியினரால் இதழியலாளர் தாக்கப்பட்டார் ........ 11

13. புகைப்படக் கண்காட்சி தடுக்கப்பட்டது ........ 11

14. எல்.ரி.ரி.ஈ.ஐ விமர்சித்த திரைப்படம் யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழாவிலிருந்து அகற்றப்பட்டது 12

15. சிறைச்சாலைப் படுகொலைகளின் சந்தேக நபர் ஒருவரான பொலிஸ் அலுவலர் ஒருவரினால் இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர் ........ 13

இ. ஏனைய அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள் ........ 14

16. போராட்டம் நடத்திய தமிழ் மாணவர்கள் சிங்களக் குழுவினால் அச்சுறுத்தப்பட்டனர் ........ 14

17. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உள்ளே பகிடிவதை எதிர்ப்பாளர்கள் தாக்கப்பட்டனர் ........ 15

18. வயம்ப பல்கலைக்கழகத்தின் உள்ளே பகிடிவதை எதிர்ப்பாளர்கள் தாக்கப்பட்டனர் ........ 15

19. போராட்டமொன்றைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டை ஏவினர் ..... 15

20. உயர்பதவிநிலை விசாரணையாளர் இடமாற்றப்பட்டார் ..... 16

ஈ. அரசியலமைப்பு சதிப்புரட்சியின் பின்னரான அடக்குமுறைகள் ..... 17

21. அரசாங்க ஊடக நிறுவனங்களில் அரசியல்வாதிகள் பலாத்காரமாகப் பிரவேசிக்கின்றனர் ..... 17

22. அரசாங்க ஊடகங்களின் இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு, வெளியேற்றப்பட்டனர் ..... 18

23. லேக் ஹவுஸினுள் பலாத்காரமாகப் பிரவேசிப்பதற்கு ஐ.தே.க. ஆதரவாளர்கள் முயற்சித்தனர் ..... 18

24. பிரதமரினதும், அமைச்சரவையினதும் சத்தியப்பிரமாண நிகழ்வினை உள்ளடக்குவதிலிருந்து ஊடகங்கள் தடுக்கப்பட்டன ..... 18

25. பாராளுமன்றத்தில் சபாநாயகர் தாக்கப்பட்டார் ..... 19

26. பாராளுமன்ற அமர்வுகளின் நேரடி ஒலிபரப்பினை ஊடகங்கள் நிறுத்தின ..... 19

27. பொலிஸாரினால் சிவில் சமூகத் தலைவர் வரவழைக்கப்பட்டு, எச்சரிக்கப்பட்டார் ..... 20

28. LGBTIQ சமூக மீதான மறுதலையிலான கருத்துக்களை ஜனாதிபதி செய்தார் ..... 21

## முறைமையியல்

2018 ஒக்ரோபரிலிருந்து டிசம்பர் வரை, இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்பான சில குறிப்பிடத்தக்க சம்பவங்களின் பொதுவான போக்குகளையும், விபரங்களையும் இந்த அறிக்கை வழங்குகின்றது. சூழமைவினை நிறைவேற்றுச் சாராம்சம் விபரிப்பதுடன், போக்குகளையும், அத்துடன் முக்கியமான கண்டுபிடிப்புக்களையும் பகுப்பாய்கின்றது. பிரதான பிரிவில் 4 வகுதிகளின் கீழ் மூலங்களுடன் அறிக்கையிடப்பட்ட 28 சம்பவங்களின் சாராம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஊடக அறிக்கைகள், INFORMக்கு அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் INFORM பணியாளரினதும், ஊடகங்களினதும் அவதானிப்புக்கள் மற்றும் அனுபவம் ஆகியன அறிக்கைக்கான தகவலின் மூலங்களாக விளங்குகின்றன.

## நிறைவேற்றுச் சாராம்சம்

இலங்கையில் என்றுமே சம்பவித்திருக்காத அரசியலமைப்புச் சதிப்புரட்சியொன்றை இந்த மூன்று மாத காலம் கண்டது. ஒக்ரோபர் 26இன் இரவன்று, அண்ணளவாக நான்கு வருடங்களுக்கு இலகுவற்ற கூட்டு அரசாங்கத்தில் இருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி சிறிசேன பதவிநீக்கினார். அத்துடன், எதிரியாக மாறிய தனது முன்னாள் அரசியல் கூட்டாளியும், 2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்தார். பாராளுமன்ற அமர்வுகளை ஜனாதிபதி ஒத்திவைத்ததுடன், பின்னர் அதைக் கலைத்தார். அத்துடன் புதிய அமைச்சர்களையும் நியமித்தார். பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்ததைத் தவிர, சகல ஏனையவையும் அரசியலமைப்புக்கு மாறானவை எனக் கருதப்படுகின்றது. பாராளுமன்றத்தில் சபாநாயகருக்கு எதிராக உடல்ரீதியானதும், வாய்மொழியிலானதுமான தாக்குதல்களுக்கு மத்தியில், ராஜபக்ஷவுக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானங்கள் பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையினரால் மீண்டும் மீண்டும் நிறைவேற்றப்பட்டன. பாராளுமன்றத்தில் ராஜபக்ஷவுக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்களின் மூர்க்கத்தனமான நடத்தையானது பாராளுமன்ற உறுப்பினர்களும், பொலிசாரும் காயமடைவதற்கு இட்டுச்சென்றது. ஜனநாயகத்திற்கும், அரசியலமைப்புக்கும் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கும் நாடு பூராகவும் போராட்டங்கள் இருந்தன. பிரதமராகச் செயற்படுவதிலிருந்து ராஜபக்ஷவை நிறுத்தும் இடைக்கால உத்தரவுகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியதுடன், பாராளுமன்றத்தைக் கலைத்தமை அரசியலமைப்புக்கு மாறானது என மீ-உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த போது 50 நாள் ஸ்தம்பித்த நிலை முடிவுக்கு வந்ததுடன், இது பிரதமராக ரணில் விக்ரமசிங்கவை மீள்-நியமிப்பதற்கு ஜனாதிபதியைக் கட்டுப்படுத்தியது. நொவம்பரில் அட்டவணைப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட வாசிப்பு நிச்சயமற்றதாக பின்போடப்பட்டதுடன், அரசியல் மற்றும் பொருளாதார உறுதியற்றதன்மைக்கு நெருக்கடிநிலை இட்டுச் சென்றது. மட்டுப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் ஸ்தம்பிதமடைந்துவிடும் அத்துடன் சிறிசேன-விக்ரமசிங்க அரசாங்கத்தின் கீழ் காணப்பட்டதை விட கருத்து வேற்றுமை மீது அதிகளவு பாரதூரமான கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பரவலான அச்சங்களுக்கு ராஜபக்ஷ மீளத்திரும்புவதன் வாய்ப்புவளம் இட்டுச்சென்றது.

பிரதமராக ராஜபக்ஷ நியமிக்கப்பட்டு சில மணித்தியாலங்களுக்குள், ஊடகச் சுதந்திரத்திற்கு எதிராக அச்சுறுத்தல்கள் இருந்ததுடன், அரசாங்க ஊடக நிறுவனங்களினால் கடந்த நான்கு வருடங்களில் காட்சிப்படுத்தப்பட்ட சார்புரீதியிலான சுதந்திரம் அரித்துதின்னப்பட்டது. அரசாங்க ஊடக நிறுவனங்களின் கட்டுப்பாட்டினை ராஜபக்ஷவுக்கு விசுவாசமான தொழிற்சங்கங்கள் கட்டுப்பாட்டுக்கு எடுத்ததினால், பதிப்புக் கொள்கைகள் மீதான கட்டுப்பாட்டினைப் பதிப்பாசிரியர்கள் இழந்தார்கள். பின்னர், குறிப்பிடத்தக்க அரசியல் நிகழ்ச்சிகளில் இருந்து ஊடகங்கள் தடுக்கப்பட்டன. சதிப்புரட்சியை எதிர்த்த முக்கியமான சிவில் சமூக செயலார்வலர் ஒருவர், பத்திரிகை மகாநாடொன்றில் அவர் செய்த கருத்துரைகள் மீதான அடிப்படையில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், அவர் குறித்தும், அரச சார்பற்ற தாபனங்கள் குறித்தும் மறுதலையிலான மேற்கோள்களை ஜனாதிபதி செய்தார். வண்ணாத்திப்பூச்சிகளினால் நிருவகிக்கப்படும் ஒன்றாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் குறிப்பிட்டு பெண் ஓரினச்சேர்க்கையாளர் - ஆண் ஓரினச்சேர்க்கையாளர் - ஈரினச்சேர்க்கையாளர் - மாற்றுப்பாலினத்தவர் - இருபால் உடலமைப்பினர் - பால்நிலைக்

குழப்பத்திலுள்ளவர் [Lesbian – Gay – Bisexual – Transgender – Intersex – Queer (LGBTIQ)] சமூகத்தை நிந்திப்பதற்கான கருத்துரைகளையும் ஜனாதிபதி செய்தார். LGBTIQ சமூகத்தை நிந்திப்பதற்காக வண்ணாத்திப்பூச்சிகள் என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது.

சதிப்புரட்சிக்கு முன்னரும், பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்துமே கடுமையாக இராணுவமயப்படுத்தப்பட்டிருந்ததுடன், காணாமலாக்கப்பட்டவர்களினதும் மற்றும் நிலத்தினதும் மீது நீண்ட காலப் போராட்டங்கள் தொடர்ந்தன. இராணுவத்தினால் இடித்துத்தள்ளப்பட்ட மயானங்களைச் சாத்தியமான அளவுக்கு புனரமைப்பதற்கான வாரங்களைக் கொண்ட தயாரிப்புக்களின் பின்னர், மரணமடைந்த எல்.ரி.ரி.ஈ. போராளிகளை நினைவூட்டுவதில் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள சில தமிழர்கள் ஈடுபட்டிருந்ததினால், நொவம்பர் மாதம் குறிப்பிட்டரீதியில் முக்கியத்துவமாக விளங்கியது. இச் சூழ்நிலையில் பெரிதுமே இக் காலத்தின் போது, நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்களை விட, பெருமளவு தமிழ் செயலார்வலர்களும் மற்றும் அரசியல்வாதிகளும் தடைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும் அத்துடன் கண்காணிப்புக்கும் முகங்கொடுத்தனர். தெளிவற்ற காரணங்களுடன், பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் இரு செயலார்வலர்கள் விசாரணைக்காக வரவழைக்கப்பட்டனர். கிழக்கில், உண்ணாவிரதப் போராட்டமொன்றைக் கைவிடுமாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர் ஒருவரின் மனைவி பொலிஸாரினால் கட்டாயப்படுத்தப்பட்டார்.

இக் காலத்தின் போது, நாட்டின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட அமைப்புக்களில் கருத்துச் சுதந்திரத்தின் பெருமளவு மீறல்கள் இருந்தன. முன்னைய மாதங்களில் தொல்லைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உட்பட்டிருந்த தமிழ் இதழியலாளரின் சகோதரரும் மற்றும் நண்பர்களும் TIDஇனால் வரவழைக்கப்பட்டனர். நீதிமன்ற வளாகமொன்றுக்கு வெளியே சிவில் உடைகளில் இருந்த கடற்படை ஆளணியினரால் சில இதழியலாளர்கள் தாக்கப்பட்டதுடன், வெளிநாட்டு நிருபர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டதாக ஊடகக் கண்காணிப்பகம் வலியுறுத்தியது. எல்.ரி.ரி.ஈ. குறித்து விமர்சித்த திரைபடமொன்று யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழாவில் பகிரங்கமாக பட்டியலிடப்பட்ட பின்னர் இடைநிறுத்தப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த மனித உரிமைகள் குறித்த பிரச்சனைகளைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சியொன்று சில மாணவர்களினால் அனுமதிக்கப்படவில்லை. கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பிணை மீது விடுவிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர் ஒருவர் உட்பட வழக்கின் சந்தேகநபர்களினால் அச்சுறுத்தப்பட்டதாக சிறைச்சாலைப் படுகொலைகள் பற்றி தொடர்ச்சியாக எழுதிவந்த இதழியலாளர் ஒருவர் அறிக்கையிட்டுள்ளார்.

அதே பல்கலைக்கழகத்திலும் அத்துடன் வயம்ப பல்கலைக்கழகத்திலும் ஏனைய மாணவர்களிடமிருந்து பகிடிவதைக்கு எதிரான மாணவர்கள் பயமுறுத்தலுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் முகங்கொடுத்தார்கள். சதிப்புரட்சியின் உச்சநிலையிலும், ஆட்கடத்தல் வழக்கொன்று தொடர்பில் நாட்டின் உயர் பதவிநிலையில் சேவையாற்றும் இராணுவ அதிகாரியின் சூழமைவிலும் ஜனாதிபதியின் உத்தரவினதும் அத்துடன் சொல்லப்பட்ட விசாரணையாளரினால் விசாரிக்கப்படும் அதே இராணுவ அதிகாரியினதும் அழுத்தத்தினதும் காரணமாக உயர் பதவிநிலையிலான பொலிஸ் விசாரணையாளர் ஒருவர் இடமாற்றப்பட்டார் (அத்துடன் அதைத் தொடர்ந்து பரவலான அழுத்தத்தின் காரணமாக மீளப்பதவிக்கு அமர்த்தப்பட்டார்). தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பினைக் கோரிய தமிழ் மாணவர்கள் சில சிங்கள ஆடவர்களினால் அச்சுறுத்தப்பட்டனர். பாதுகாவலில் சார்த்துரைக்கப்பட்ட மரணம் பற்றி போராடிய மக்கள் மீது கண்ணீர்புகைக் குண்டு சுட்டதாக பொலிஸார் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.


# அ. வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் செயலார்வலர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்துமே கடுமையாக இராணுவமயமாக்கப்பட்டுள்ளதுடன், ஆனால் இந்த வருடத்திலும் அத்துடன் கடந்த சில வருடங்களிலும் யுத்தத்தின் போது இறந்தவர்களுக்கு நினைவேந்தல்களை நடத்துதல் மற்றும் நினைவுச் சின்னங்களைக் கட்டுதல் ஆகியன உட்பட பலதரப்பட்ட பிரச்சனைகள் மீது போராட்டங்களும், எதிர்ப்புக்களும் இருந்தன. மரணமடைந்த எல்.ரி.ரி.ஈ. போராளிகளை நினைவூட்டுவதில் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள சில தமிழர்கள் ஈடுபட்டிருந்ததினால், நொவம்பர் மாதம் குறிப்பிட்டரீதியில் முக்கியத்துவமாக விளங்கியது. இச் சூழ்நிலையில் பெரிதுமே இந்த மூன்று மாதங்களின் போது, நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்களை விட, பெருமளவு தமிழ் செயலார்வலர்களும் மற்றும் அரசியல்வாதிகளும் தடைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும் அத்துடன் கண்காணிப்புக்கும் முகங்கொடுத்தனர். மேலதிகமாக, மட்டக்களப்பின் கிழக்கு நகரத்தில் போராட்டமொன்றைக் கைவிடுமாறு தடுத்துவைக்கப்பட்ட தமிழர் ஒருவரின் மனைவியைப் பொலிஸார் கட்டாயப்படுத்தியதுடன், பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் இரு செயலார்வலர்கள் விசாரணைக்காக வரவழைக்கப்பட்டனர்.

## 1. TIDஇனால் செயலார்வலர் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார்

ஒக்ரோபர் 4 அன்று, 'தேசத்தின் வேர்கள்' (Roots of the Nation) என்ற தாபனத்தின் பணிப்பாளர் கணேஷன் பிரபாகரன் இலங்கைப் பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் விசாரிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அவர் பிரிவில் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை காத்திருக்க வைக்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைக்காக எதிர்காலத்தில் அவர் அழைக்கப்படலாம் என எச்சரிக்கை செய்யப்பட்டார். தனது தாபனம், அதன் செயற்பாடுகள் மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல் ஆகியன பற்றி தன்னை விசாரித்ததாக அவர் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[1]

## 2. TIDஇனால் செயலார்வலர் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார்


SRI LANKA POLICE
MESSAGE FORM
Distribution

*பிரதிமை 1: தம்பையா லோகேஸ்வரனுக்கு TIDஇனால் வழங்கப்பட்ட அழைப்பாணைக் குறிப்பு, புகைப்பட அனுசரணை - www.tamilguardian.com*

[1] https://www.tamilguardian.com/content/tamil-organiser-investigated-tid (கடைசியாக டிசம்பர் 3 அன்று அடையப்பட்டது)

முல்லை ஈசன் என அறியப்பட்ட முல்லைத்தீவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் செயலார்வலரான தம்பையா லோகேஸ்வரன் இலங்கைப் பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் வரவழைக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 5 அன்று, அவரது செயற்பாடுகள் குறித்து TIDஇன் முல்லைத்தீவு அலுவலகத்தினால் அவர் விசாரிக்கப்பட்டார்.[2]

## 3. TIDஇனால் அரசியல் கட்சிப் பேச்சாளர் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார்



*பிரதிமை 2: கணேசலிங்கம் சந்திரலிங்கம் (இடது) அழைப்பாணைக் குறிப்பு (வலது), புகைப்பட அனுசரணை - www.daillymrror.lk and www.tamilguardian.com*

டிசம்பர் 10 அன்று, முன்னாள் எல்.ரி.ரி.ஈ. போராளிகளின் அரசியல் கட்சியொன்றான "ஜனநாயகத்திற்கான இரட்சகர்கள்"இன் பேச்சாளர் கணேசலிங்கம் சந்திரலிங்கம் இலங்கைப் பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் (TID) வரவழைக்கப்பட்டதாகவும், அவரது கட்சி செயற்பாடுகள் மற்றும் அவரது அறிக்கைகள் ஆகியன குறித்து விசாரிக்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.[3]

## 4. மாவீரர் நினைவுதினம் குறித்து இராணுவத்தின் எச்சரிக்கை மற்றும் கரிசனை

நொவம்பரில் இடம்பெறவிருந்த எல்.ரி.ரி.ஈ. (தமிழ்ப் புலிகள்) போராளிகளுக்கான நினைவுதினம் குறித்து இராணுவம் தொடர்ந்துமே எச்சரிக்கையுடனும், கரிசனையுடனும் இருப்பதாக இலங்கையின் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "சிவிலியன்களைக் நினைவுகூருவது பிரச்சனை அல்ல, ஆனால் எல்.ரி.ரி.ஈ. போராளிகள் நினைவுகூரப்பட்டால், நாம் எச்சரிக்கையுடனும், கரிசனையுடனும் இருப்பது அவசியமாகும்" என இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். நினைவுதினத்தின் பெயரின் கீழ், தேசியப் பாதுகாப்புக்கான ஏதேனும் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பதற்கு சகல மூன்று ஆயுதப் படைகளும் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.[4]

## 5. திலீபன் நினைவுதின அமைப்பாளர் TIDஇனால் வரவழைக்கப்பட்டார்

உள்ளூர் செயலார்வலர் ஒருவரும் அத்துடன் திலீபனின் (உண்ணாவிரதத்தில் மரணமடைந்த முன்னாள் எல்.ரி.ரி.ஈ. தலைவர்) அண்மைய நினைவுதினத்தின் முன்னணிவாய்ந்த அமைப்பாளர் ஒருவருமான கந்தையா பிரபாகரன் இலங்கைப் பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் வரவழைக்கப்பட்டார். ஒக்ரோபர் 18

[2] https://www.tamilguardian.com/content/tid-summons-mullaitivu-human-rights-activist (கடைசியாக டிசம்பர் 4 அன்று அடையப்பட்டது)

[3] https://www.tamilguardian.com/content/tid-summons-spokesperson-former-ltte-cadre-political-party (கடைசியாக டிசம்பர் 9 அன்று அடையப்பட்டது)

[4] https://www.tamilguardian.com/content/sri-lankan-army-%E2%80%98cautious-and-concerned%E2%80%99-over-maaveerar-naal-commemorations (கடைசியாக டிசம்பர் 3 அன்று அடையப்பட்டது)

அன்று, சாவகச்சேரி, மறவன்புலவில் உள்ள திரு.கந்தையாவின் வதிவிடத்திற்கு சென்ற TID அலுவலர்கள் ஒக்ரோபர் 29 அன்று விசாரணைக்கு வருமாறு அவருக்கு அழைப்புவிடுத்தனர்.[5]

### 6. வட மாகாண சபை உறுப்பினரும், 4 இளைஞரும் கைதாகினர்



*பிரதிமை 3: வட மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கைது செய்யப்பட்ட வேளை - புகைப்பட அனுசரணை - https://www.tamilguardian.com*

நொவம்பர் 26 அன்று, வல்வெட்டித்துறையில் அவரது மூதாதையரின் வதிவிடத்திற்கு அருகில் எல்.ரி.ரி.ஈ. தலைவர் வி.பிரபாகரனை நினைவுபடுத்துவதற்காக முன்னாள் வட மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முயன்ற வேளை, இலங்கைப் பொலிஸினால் கைது செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அவர் ஒரு 'கேக்', மெழுகுவர்த்தி மற்றும் சில வேறு பொருட்கள் ஆகியவற்றுடன் கைதுசெய்யப்பட்டார். ஆனால், அவர் பின்னர் விடுவிக்கப்பட்டார். இதனிடையே, அதே தினம் காலையில் பிரபாகரனின் வீட்டைச் சுற்றியிருந்த புதர்களை அகற்றிக்கொண்டிருந்த வேளை, பொலிஸாரினால் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அவர்களைப் பொலிஸார் அச்சுறுத்தியதாகவும், பகுதியை விட்டுச்செல்லுமாறு எச்சரிக்கை செய்ததாகவும், அவர்களைப் பொலிஸார் புகைப்படம் எடுத்ததாகவும் கைதுகள் குறித்து அறிக்கையிட்டுள்ள இதழியலாளர்கள் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.[6]

---

[5] https://www.tamilguardian.com/content/organiser-thileepan-memorials-summoned-tid (கடைசியாக டிசம்பர் 5 அன்று அடையப்பட்டது)

[6] https://www.tamilguardian.com/content/sri-lankan-police-arrest-former-npc-councillor-marking-prabhakarans-birthday (கடைசியாக டிசம்பர் 4 அன்று அடையப்பட்டது), https://www.tamilguardian.com/content/sri-lankan-police-arrest-4-tamil-youth-outside-prabhakaran%E2%80%99s-home (கடைசியாக டிசம்பர் 5 அன்று அடையப்பட்டது)

## 7. நினைவேந்தல் நிகழ்வொன்றுக்கு தடைகள்



*பிரதிமை 4: அகற்றப்பட்ட கல்லறைகள் - புகைப்பட அனுசரணை - www.tamilguardian.com*

மட்டக்களப்பின் வாகரையில் உள்ள கண்டலடியில் எல்.ரி.ரி.ஈ. மயானத்தில் பெயர் விபரங்கள் பதிக்கப்பட்ட புதிய கற்கைள அகற்றுமாறு நினைவுகூரல் நிகழ்ச்சியொன்றுக்கு வந்த மக்கள் பொலிஸாரினால் நிர்ப்பந்திக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. 2007இல் மயானத்தின் மூலத்திலான கல்லறைகள் இராணுவத்தினால் அழிக்கப்பட்டதுடன், அண்மையில் தான் பெயர் விபரங்கள் பதிக்கப்பட்ட புதிய கல்லறைகள் கட்டப்பட்டன. "பாரம்பரியமான நினைவுகூரல் பாடலை இசைப்பதற்கும் எம்மை அனுமதிக்கவில்லை என்பதுடன், சிவப்பும், மஞ்சளும் கலந்த கொடிகளைப் பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டது" என பங்கெடுப்பாளர்கள் தெரிவித்தனர். அமைதியான நினைவுகூரல் நிகழ்வினை நடத்துவதற்கு தம்மைப் பொலிஸார் அனுமதிக்கவில்லை என்றும், நிகழ்வினை அவசரத்துடன் நடத்த வேண்டியிருந்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.[7]

[7] https://www.tamilguardian.com/content/police-force-removal-memorial-headstones-vakarai-ltte-cemetery (கடைசியாக டிசம்பர் 4 அன்று அடையப்பட்டது)

## 8. நினைவுகூரல் நிகழ்வொன்றின் மீது தாக்குதல்கள்




*பிரதிமை 5: சேதமாக்கப்பட்ட வீடு (இடது) பகுதியில் பொலிஸ் குழுக்கள் (வலது) - புகைப்பட அனுசரணை - www.tamilguardian,com*

நொவம்பர் 27 அன்று, பருத்தித்துறை, முனையில் மாவீரர் நினைவுகூரல்களுக்கான அலங்காரங்கள், கொடிகள் மற்றும் ஏனைய தயாரிப்புகள் ஆகியன உள்ளூர் பொலிஸாரினால் அழிக்கப்பட்டன. முன்னதாக, நிகழ்வுக்காக ஒன்றுகூடுவதற்கும், தீபங்களை ஏற்றுவதற்கும் இயலக்கூடியதாக இருக்கும் என பகுதியின் மக்களுக்கு கூறப்பட்டுள்ளது. "யுத்தத்தின் போது எமது உறவினர்களை நினைவுகூருவதற்கான எமது உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளதுடன், ராஜபக்ஷ மீளத்திரும்பியதினாலேயே இந்தத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என நாம் நினைப்பதுடன், நாம் அச்சமும் அடைந்துள்ளோம்" என ஊடகங்களுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் கூறியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனிடையே, நிகழ்ச்சி அமைப்பாளரின் வீடு தாக்கப்பட்டதுடன், இது நிகழ்ச்சியைத் தடுப்பதற்கே திட்டமிடப்பட்டதாகச் சிலர் நம்புகின்றனர்.[8]

[8] https://www.tamilguardian.com/content/home-maaveerar-naal-organiser-attacked-after-police-disrupt-commemorations-point-pedro and https://www.tamilguardian.com/content/tid-resumes-targeting-tamil-guardian-correspondent-issuing-12th-summons-friend (கடைசியாக டிசம்பர் 4 அன்று அடையப்பட்டது)

### 9. உண்ணாவிரதப் போராட்டமொன்றை நிறுத்துமாறு தடுத்து வைக்கப்பட்டவரின் மனைவியை பொலிஸார் நிர்ப்பந்தித்தனர்




*பிரதிமை 6: உண்ணாவிரதப் போராட்டத்தின் போது ராஜகுமார் செல்வராணியும், அவரது நான்கு பிள்ளைகளும் - புகைப்பட அனுசரணை - www.tamilguardian*

தனது கணவரை விடுவிக்குமாறு கோரி நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்துமாறு பொலிஸ் அலுவலர்களினால் தான் அச்சுறுத்தப்பட்டதாக தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் எல்.ரி.ரி.ஈ. போராளியின் மனைவி ராஜ்குமார் செல்வராணி தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு, வவுணதீவில் இரு இலங்கைப் பொலிஸ் அலுவலர்களின் மரணம் தொடர்பில் முன்னாள் எல்.ரி.ரி.ஈ. போராளியான அவரது கணவரான கதிர்காமத்தம்பி ராஜ்குமார் அல்லது அஜந்தன் கைது செய்யப்பட்டார். குடும்பத்தைக் காப்பாற்றுவது தனது கணவர் மட்டுமே என்றும், அவர் திரும்பி வராவிட்டால், தானும், தனது பிள்ளைகளும் நஞ்சைக் குடிப்பதைத் தவிர வேறு தெரிவுயில்லை என்றும் செல்வராணி வலியுறுத்தியுள்ளார். பின்னர், உண்ணாவிரதப் போராட்டம் நிறுத்தப்பட்டதுடன், இது அரசாங்க அலுவலர்களினதும், உள்ளூர் அரசியல்வாதிகளினதும் வேண்டுகோள்களினதும், வாக்குறுதிகளினதும் மீதான அடிப்படையிலானது என அறிக்கையிடப்பட்டுள்ளது. எனினும், இது பொலிஸாரினால் நிர்ப்பந்திக்கப்பட்ட பின்னரே நிறுத்தப்பட்டது என செல்வராணி தெரிவித்தார்.[9]

[9] https://www.tamilguardian.com/content/police-threats-forced-wife-detained-former-ltte-cadre-end-protest (கடைசியாக டிசம்பர் 10 அன்று அடையப்பட்டது)

## ஆ. கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராகத் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள்

முன்னைய மாதங்களில் தொல்லைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உட்பட்டிருந்த தமிழ் இதழியலாளரின் சகோதரரும் மற்றும் நண்பர்களும் TIDஇனால் வரவழைக்கப்பட்டனர். நீதிமன்ற வளாகமொன்றுக்கு வெளியே சிவில் உடைகளில் இருந்த கடற்படை ஆளணியினரால் சில இதழியலாளர்கள் தாக்கப்பட்டதுடன், வெளிநாட்டு நிருபர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டதாக ஊடகக் கண்காணிப்பகம் வலியுறுத்தியது. எல்.ரி.ரி.ஈ. குறித்து விமர்சித்த திரைபடமொன்று யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழாவில் பகிரங்கமாகப் பட்டியலிடப்பட்ட பின்னர் இடைநிறுத்தப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த மனித உரிமைகள் குறித்த பிரச்சனைகளைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சியொன்று சில மாணவர்களினால் அனுமதிக்கப்படவில்லை. கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பிணை மீது விடுவிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர் ஒருவர் உட்பட வழக்கின் சந்தேகநபர்களினால் அச்சுறுத்தப்பட்டதாக சிறைச்சாலைப் படுகொலைகள் பற்றி தொடர்ச்சியாக எழுதிவந்த இதழியலாளர் ஒருவர் அறிக்கையிட்டுள்ளார். ஒக்ரோபர் 26இன் "அரசியலமைப்புச் சதிப்புரட்சியின்" பின்னரான ஊடகச் சுதந்திரம் தொடர்பான பெருமளவு வேறு சம்பவங்கள் புறம்பான பகுதியொன்றில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

### 10. தமிழ் இதழியலாளரை இலக்குபடுத்துவதை TID தொடர்கின்றது

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆனைக்கோட்டை இந்து ஆலயத்தில் திருவிழாவொன்றின் போது தமிழர் தாயக தேசப்படமொன்றைக் காட்சிப்படுத்தியதற்காக யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட தமிழ் இதழியலாளர் உதயராசா ஷலினுக்கு இலங்கைப் பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவு தொடர்ந்தும் தொல்லை கொடுத்ததுடன், அச்சுறுத்தியும் வந்தது. ஒக்ரோபரிலும், நொவம்பரிலும் அவரது சகோதரரையும், நண்பர்களையும் வரவழைத்ததே மிகவும் அண்மைய தொல்லையாகும். நூற்றுக்கணக்கான மக்களின் பங்கெடுப்புடன் இதழியலாளரின் கிராமமான ஆனைக்கோட்டையில் கடந்த ஓகஸ்டில் திருவிழா நடந்ததுடன், சர்ச்சைக்குரிய திருவிழா குறித்த அறிக்கைகளுடன் தேசப்படத்தைக் கொண்ட புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன. இதைத் தொடர்ந்து, இதழியலாளர் ஷலினும் மற்றும் வேறு ஐவரும் TIDஇனால் வரவழைக்கப்பட்டு, தேசப்படத்தைக் காட்சிப்படுத்தியது பற்றி விசாரிக்கப்பட்டது. தன்னை வரவழைத்தமை பற்றி கேள்விகளை ஷலின் எழுப்பியதுடன், தான் ஆலய சபையின் உறுப்பினர் அல்லர் எனவும் தெரிவித்துள்ளார். எனினும், அவரது பணிகள் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை ஆகியன குறித்து மணிக்கணக்கில் அதன் கொழும்புத் தலைமையகத்தில் TIDஇனால் அவர் விசாரிக்கப்பட்டார். பின்னர் ஷலினின் சகோதரர் உதயராசா ஜெல்சின், ஷலினின் நெருங்கிய நண்பர் ஒருவர் உட்பட பகுதியின் வேறு இரு இளம் ஆண்கள் TIDஇனால் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டனர். TIDக்குப் புறம்பாக, பிரச்சனை பற்றிய விசாரணைகளை பகுதியின் பெருமளவு வேறு பொலிஸ் நிலையங்கள் நடத்தியதுடன், பகுதியில் பெருமளவு குடியிருப்பாளர்களும் விசாரிக்கப்பட்டனர். ஷலினின் கூற்றுப்படி, தற்போது விசாரணைகள் அவர் மீது நோக்கினைக் கொண்டிருப்பதாகவும், அவரை அச்சுறுத்துவதற்காகவும், அவரது பணியை அமைதியாக்குவதற்காகவும் சம்பந்தப்பட்டவர்களால் சம்பவம் பயன்படுத்தப்படுகின்றது. முன்னர் அச்சுறுத்தல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும் மற்றும் தாக்குதலுக்கும் இதழியலாளர் உட்பட்டிருந்தார்.[10]

[10] https://www.tamilguardian.com/content/tid-continues-target-tamil-journalist-summoning-family-and-friends (கடைசியாக டிசம்பர் 5 அன்று அடையப்பட்டது)

## 11. 'இந்து' நிருபரை ஊடக அமைச்சர் இலக்குப்படுத்தினார்



*பிரதிமை 7: மீரா சிறீநிவாசன் - புகைப்பட அனுசரணை - www.newshub.lk*

இந்திய புலனாய்வுச் சேவையான RAWஉடன் (ஆராய்ச்சி பகுப்பாய்வு அணி) 'இந்து' செய்திப்பத்திரிகையின் கொழும்பு நிருபரான இந்தியப் பெண் இதழியலாளர் மீரா ஸ்ரீநிவாசனுக்கு தொடர்பு இருப்பதாக ஓர் அமைச்சரவை அமைச்சரும் மற்றும் ஐக்கிய வெகுஜன சுதந்திர முன்னணியின் பொது செயலாளரும் சார்த்துரைகளைச் செய்துள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொல்வதற்காக RAW திட்டம் தீட்டுவதாகக் குற்றஞ்சாட்டி அமைச்சரவைக் கூட்டமொன்றில் அறிக்கையொன்றை ஜனாதிபதி விடுத்திருந்ததாகச் செய்தியொன்றை இதழியலாளர் அறிக்கையிட்டுள்ளார்.[11] இந்த அறிக்கை ஜனாதிபதியினால் மறுத்துரைக்கப்பட்டது. ஆனால், அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கெடுத்த நான்கு அமைச்சர்களினால் செய்தி உறுதிப்படுத்தப்பட்டதாக 'இந்து' வலியுறுத்தியிருந்தது. அமைச்சரின் பதிலிறுப்புக்கள் ஆதாரமற்ற சார்த்துரைகள் எனபதுடன், அச்சுறுத்தலாவை என இலங்கை சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்தியதுடன், இது பதிலளிப்பதற்கான உரிமைக்கு அப்பால் செல்வதாகவும் அத்துடன் ஊடகச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் மீறுகின்ற அச்சுறுத்தலாக விளங்குவதாகவும் தெரிவித்துள்ளது.[12]

---

https://www.tamilguardian.com/content/harassment-tamil-guardian-correspondent-recalls-sri-lanka%E2%80%99s-worst-period-persecution-tamil (கடைசியாக டிசம்பர் 5 அன்று அடையப்பட்டது)

11 https://www.thehindu.com/news/international/sri-lankan-president-sirisena-alleges-that-raw-is-plotting-his-assassination/article25241800.ece (கடைசியாக டிசம்பர் 28 அன்று அடையப்பட்டது)

12 [12]http://srilankabrief.org/2018/10/government-allegations-against-colombo-hindu-correspondent-violates-media-freedom-fmm/ (கடைசியாக டிசம்பர் 6 அன்று அடையப்பட்டது), https://www.ifj.org/media-centre/news/detail/category/press-releases/article/sri-lanka-foreign-journalist-intimidated-over-report.html (கடைசியாக டிசம்பர் 6 அன்று அடையப்பட்டது)

## 12. கடற்படை ஆளணியினரால் இதழியலாளர் தாக்கப்பட்டார்

நொவம்பர் 28 அன்று, கொழும்பு கோட்டை நீதிவான் மன்றத்தில் பிரதம பாதுகாப்பு அதிகாரி ரவிந்ர விஜேரத்ன முன்னிலையாகியது குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற வேளையில், பெருமளவு புகைப்பட இதழியலாளர்களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் தாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பதினொரு இளைஞர்களின் காணாமலாக்கப்பட்டதில் குற்றவாளி ஒருவரான கடற்படை அலுவலர் பிரசாத் ஹெட்டிஆரச்சியை அல்லது நேவி சம்பத்தை பாதுகாப்பதாக பிரதம பாதுகாப்பு அதிகாரி குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய பெருமளவு ஆடவர்களால் திடீரென இதழியலாளர்களும், புகைப்படப்பிடிப்பாளர்களும் தாக்கப்பட்டனர். பின்னர், அவர்கள் பிரதம பாதுகாப்பு அதிகாரியின் சிவில் உடைகளிலான மெய்ப்பாதுகாப்பாளர்கள் என அடையாளங்காணப்பட்டதுடன், அவர்களில் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். எனினும், எச்சரிக்கையொன்றின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.[13]

## 13. புகைப்படக் கண்காட்சி தடுக்கப்பட்டது





*பிரதிமை 8: கண்காட்சியின் இரு தருணங்கள், மாத்தறை (இடது) கொழும்பு (வலது) - புகைப்பட அனுசரணை - http://unframedsl.org/exhibition/*


'விகல்ப' (Vikalpa) என்ற சிங்கள நகரத்திற்குரிய ஊடக அரங்கொன்றினால் ஒழுங்குபடுத்தப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பினைக் கொண்ட “Unframed” என்ற கண்காட்சியொன்று பேராதனை பல்கலைக்கழகத்தினால் தடுக்கப்பட்டது. இலங்கை தொடர்பான மனித உரிமைகள் பிரச்சனைகளின் புகைப்படங்களைக் கண்காட்சி கொண்டிருந்ததுடன், இது முன்னர் கொழும்பு, நீர்கொழும்பு, மாத்தறை மற்றும் அனுராதபுரம் ஆகியவற்றில் நடைபெற்றது. இது பல்கலைக்கழகத்தின் இலக்கிய விழாவின் அங்கமொன்றாக ஒக்ரோபர் 16-18 வரை பல்கலைக்கழகத்தில் காட்சிப்படுத்தப்படவிருந்தது. ஒக்ரோபர் 15இலிருந்து 'விகல்ப'வுக்கும், அதன் பதிப்பாசிரியர் சம்பத் சமரக்கோனுக்கும் எதிராக மரண அச்சுறுத்தல்கள் எழுப்பப்பட்ட போதிலும், 16ஆம் திகதியன்று பொதுமக்களுக்காக கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. எனினும், சில மாணவர்களால் எல்.ரி.ரி.ஈ. சார்பான கண்காட்சி என விமர்சிக்கப்பட்டது. அது நிறுத்தப்பட வேண்டும் என கண்காட்சியை எதிர்த்த மாணவர்கள் வற்புறுத்தியதுடன், இந்தப் பின்னணியில் கண்காட்சி இடம்பெறவில்லை.[14]

---

[13] http://www.dailymirror.lk/article/Journalists-covering-CDS-case-attacked-159032.html (கடைசியாக டிசம்பர் 8 அன்று அடையப்பட்டது) http://srilankabrief.org/2018/11/sri-lanka-fmm-condemns-assault-of-journalist-at-court-premises/ (கடைசியாக டிசம்பர் 6 அன்று அடையப்பட்டது)

[14] http://colombogazette.com/2018/10/18/cpa-condemns-censorship-of-unframed-at-the-university-of-peradeniya/, http://www.sundayobserver.lk/2018/10/28/issues/unframed-censored-peradeniya-university (கடைசியாக டிசம்பர் 15 அன்று அடையப்பட்டது)

## 14. எல்.ரி.ரி.ஈ.ஐ விமர்சித்த திரைப்படம் யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழாவிலிருந்து அகற்றப்பட்டது




*பிரதிமை 9: திரைப்படத்தின் பதாகை - புகைப்பட அனுசரணை - www.sundayobserver.lk*

2016இல் கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட "Demons in Paradise" என்ற ஆவண திரைப்படத்தின் அட்டவணைப்படுத்தப்பட்ட திரையிடலொன்றை யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழாவின் அமைப்பாளர்கள் இரத்துச் செய்தனர்.[15] இத்திரைப்படம் இலங்கையில், ஆனால் எப்பொழுதுமே தீவகத்தின் தெற்கில் பெருமளவு தடவைகள் திரையிடப்பட்டது. இது ஒக்ரோபர் 5 அன்று, யாழ்ப்பாணம் பட்டினத்தின் மத்தியில் உள்ள மஜெஸ்ரிக் சினிபிளெக்ஸில் திரையிடுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தது. இது முன்னைய யுத்தம் புரியப்பட்ட வட மாகாணத்தில், முதல் தடவையாக முற்றுமுழுதாக தமிழ் பேசும் ரசிகர்களுக்காகப் பகிரங்கமாக திரையிடப்படுவதாகக் குறித்துரைக்கப்பட்டிருந்தது. "சமூகத்திடமிருந்து அழுத்தத்தின்" காரணமாக விழா வரிசையிலிருந்து திரைப்படத்தை அகற்றுவதற்கு தாம் கட்டாயப்படுத்தப்பட்டதாக மட்டுமே அமைப்பாளர்கள் தன்னிடம் கூறியதாக திரைப்படத்தின் இயக்குனர் ஜூட் ரட்ணம் தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எதிர்ப்புக்களை எழுப்பிய குறிப்பான தனிப்பட்டவர்களை அல்லது குழுக்களைப் பெயரிடுவதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர். "ஆரம்பத்தில் அவர்கள் எனக்கு அறிவிக்கவில்லை. 'ஒன்லைனில்' இடப்பட்ட நிகழ்ச்சிநிரலில் திரைப்படம் இருக்கவில்லை என்பதை அவதானித்தேன்" என அவர் தெரிவித்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. வடக்கு இன்னுமே "உணர்ச்சிமிக்க இடம்" என்பதனால், Demons in Paradise திரைப்படத்தை திரையிடுவதை முன்னெடுத்துச் செல்வது விழாவை அபாயத்தில் வைத்துவிடும் என உத்தியோகபூர்வமற்ற விதத்தில் தாம் கவலையடைந்திருந்ததாக விழா அமைப்பாளர்கள் தெரிவித்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. திரைப்படம் அகற்றியமைக்கான காரணங்களை விழா அமைப்பாளர் அனோமா ராஜகருணா மறுக்கவில்லை அல்லது விளக்கமளிக்கவுமில்லை. ஆனால், பதிலாக கருத்துச் சுதந்திரத்தின் அரங்கொன்றையும், பகிரங்க

[15] http://www.sundayobserver.lk/2018/10/07/news-features/fleeing-your-demons (கடைசியாக டிசம்பர் 27 அன்று அடையப்பட்டது)

கலந்துரையாடலொன்றையும் நடத்துவதற்கு அதனைப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கையுடன் திரைப்படத்திற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை வெறுமையாக வைத்திருப்பதை அமைப்பாளர்கள் தெரிவுசெய்தனர்.

## 15. சிறைச்சாலைப் படுகொலைகளின் சந்தேக நபர் ஒருவரான பொலிஸ் அலுவலர் ஒருவரினால் இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்




*பிரதிமை 10: கசுன் புஸவெல (இடது) வெலிக்கடை கொலைகள் மீதான அவரது நூல் (வலது) - புகைப்பட அனுசரணை - www.facebook.com*

2012இன் சிறைச்சாலைப் படுகொலைகளில் சந்தேக நபராக அடையாளங்காணப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டு, பிணை மீது விடுவிக்கப்பட்ட இலங்கைப் பொலிஸின் இன்ஸ்பெக்டர் நியோமல் ரங்கஜீவவிடமிருந்து வரும் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் குறித்து தேசிய சாட்சி, பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு அதிகாரசபையில் முறைப்பாடொன்றை இதழியலாளர் சுகன் புஸவெல்ல தாக்கல் செய்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[16] 2012 நொவம்பர் 9இலும் 10இலும் கிளர்ச்சியொன்றின் போது வெலிக்கடை சிறைச்சாலையின் இருபத்தியேழு கைதிகள் கொல்லப்பட்டனர். வருடக்கணக்கில் வழக்கு பற்றி இதழியலாளர் கசுன் புஸவெல எழுதிவந்ததுடன், பெருமளவு கட்டுரைகளையும், நூலொன்றையம் ஏற்கனவே வெளியிட்டுள்ளார். INFORMக்கு இதழியலாளரினால் கூறப்பட்டுள்ளவாறு, அவரது அறிக்கையிடுதலின் காரணமாக அவர் அச்சுறுத்தப்படுகின்றார், நியாயமற்ற விதத்தில் நிந்திக்கப்படுகின்றார்.

[16] https://www.facebook.com/kasun.pussewela/posts/10212143996506302 (கடைசியாக டிசம்பர் 27 அன்று அடையப்பட்டது)

# இ. ஏனைய அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள்

காலத்தின் போது அறிக்கையிடப்பட்டுள்ள வேறு வடிவங்களைக் கொண்ட அச்சுறுத்தல்களும், பயமுறுத்தல்களும் உள்ளன. தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவதைக் கோரிய தமிழ் மாணவர்கள் சில சிங்கள ஆடவர்களினால் அச்சுறுத்தப்பட்டனர். பாதுகாவலில் சார்த்துரைக்கப்பட்ட மரணம் பற்றி போராடிய மக்களை நோக்கி கண்ணீர் புகைக் குண்டினை ஏவியதற்காக பொலிசார் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். பேராதனை மற்றும் வயம்ப ஆகிய பல்கலைக்கழகங்களில் புறம்பான சம்பவங்களில் ஏனைய மாணவர்களிடமிருந்து பயமுறுத்தலுக்கும், அச்சுறுத்தலுக்கும் பகிடிவதைக்கு எதிரான மாணவர்கள் முகங்கொடுத்தனர். அத்துடன் உச்சநிலையிலான பொலிஸ் விசாரணையாளர் ஒருவர் ஜனாதிபதியினதும் அத்துடன் இதே விசாரணையாளரினாலும் விசாரிக்கப்படும் மிகவும் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரினதும் உத்தரவுகளின் காரணமாக இடமாற்றப்பட்டார் (அத்துடன் இதைத் தொடர்ந்து அவர் மீள்-நியமிக்கப்பட்டார்).

### 16. போராட்டம் நடத்திய தமிழ் மாணவர்கள் சிங்களக் குழுவினால் அச்சுறுத்தப்பட்டனர்



பிரதிமை 11: தமிழ் மாணவர்களை அச்சுறுத்திய சிங்களக் குழு - புகைப்பட அனுசரணை - http://www.jdslanka.org/

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோரி, யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரதத்திற்கான 194 கி.மீ. எதிர்ப்பு நடைபவனியை முடித்துக் கொண்ட தமிழ் மாணவர்கள் ஒக்ரோபர் 13 அன்று அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சற்று வெளியே, சிங்கள ஆடவர்களைக் கொண்ட குழுவினால் அச்சுறுத்தப்பட்டனர். தமிழ் மாணவர்களை அணுகிய குழுவானது அவர்களை அச்சுறுத்தியதுடன், எல்.ரி.ரி.ஈ.ஐப் பிரதிநிதிப்படுத்துவதாக மாணவர்களைக் குற்றஞ்சாட்டியது. 'எல்.ரி.ரி.ஈ.இன் சார்பாக நீங்கள் வந்திருந்தால் விலகிச்செல்வது நல்லது, எல்.ரி.ரி.ஈ.ஐப் பிரதிநிதிப்படுத்தும் யாரேனும் ஒருவர் முன்னால் வரலாம்" என சிங்கள ஆடவர்களின் குழு தெரிவித்துள்ளது. எல்.ரி.ரி.ஈ. இன்னும் இயங்கின்றதா என மாணவர்களிடம் கேட்கப்பட்டதுடன், அவர்களை வாயை மூடிவிட்டு செவிமடுக்குமாறும் கூறப்பட்டது. "நீங்கள் எல்.ரி.ரி.ஈ.க்காக வந்தீர்கள் என இன்றிரவு ஊடகங்கள் கூறினால், நீங்கள் முடிந்தீர்கள்" எனவும் கூறப்பட்டது. அந்த இடத்திற்கு பொலிஸ் அலுவலர்களும், சிறைச்சாலை அலுவலர்களும் வந்தார்கள். ஆனால், அவர்கள் தலையிடவில்லை. இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களினால் சம்பவம் மீதான 'வீடியோ' நறுக்கு வெளியிடப்பட்டது.[17]

[17] https://www.tamilguardian.com/content/video-captures-sinhala-men-threatening-tamil-students (கடைசியாக டிசம்பர் 1 அன்று அடையப்பட்டது) http://www.jdslanka.org/index.php/news-features/politics-a-current-affairs/819-sri-lanka-police-look-on-while-sinhala-thugs-threaten-peaceful-tamil-march (கடைசியாக டிசம்பர் 1 அன்று அடையப்பட்டது)

### 17. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உள்ளே பகிடிவதை எதிர்ப்பாளர்கள் தாக்கப்பட்டனர்

நொவம்பர் 22 அன்று, 'பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பகிடிவதை எதிர்ப்பவர்கள்' என வலியுறுத்திய மாணவர்களின் குழுவொன்று பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளே மாணவர்களைக் கொண்ட இன்னொரு குழுவினால் தாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. "பகிடிவதை எதிர்ப்புக் குழு புகைப்படமொன்றை எடுப்பதற்கு பல்கலைக்கழகத்தின் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து அனுமதியை நாம் பெற்றதுடன், அதற்காக மண்டபமொன்றையும் முன்பதிவு செய்திருந்தோம்" என பகிடிவதை எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர். அவர்களின் கூற்றுப்படி, புகைப்படமெடுப்பதை அவர்கள் தயார்படுத்திக் கொண்டிருந்த வேளை, பகிடிவதைக்கு ஆதரவைக் கொண்டிருந்த மாணவர்களைக் கொண்ட குழுவொன்று மண்டபத்திற்கு வந்து, புகைப்படக் கருவிகளைத் தூக்குவதை ஆரம்பித்தது. "அவர்கள் எம்மை நோக்கி கூச்சலிட்டதுடன், எம்மைச் சபிக்கவும், அச்சுறுத்தவும் ஆரம்பித்தனர்" என பகிடிவதை எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. சம்பவம் தொடர்பாக பீடாதிபதியுடன் (பல்கலைக்கழகத்தின்) முறைப்பாடொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், புகைப்படக் கருவிகளைத் திருடியதற்காக பகிடிவதை எதிர்ப்பாளர்களினால் இன்னொரு முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.[18]

### 18. வயம்ப பல்கலைக்கழகத்தின் உள்ளே பகிடிவதை எதிர்ப்பாளர்கள் தாக்கப்பட்டனர்

டிசம்பர் 26 அன்று, வயம்ப பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடத்தில் கற்றுக்கொண்டிருந்த மாணவர்களின் குழுவொன்று பகிடிவதைக்கு எதிராக எதிர்ப்புக்களை எழுப்பியமையின் காரணமாக, பல்கலைக்கழகத்திற்கு அருகில் சிரேஷ்ட மாணவர்களைக் கொண்ட குழுவினால் தாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பகிடிவதைக்கு எதிராக எதிர்ப்புக்களை எழுப்பிய முதல் ஆண்டின் இரு மாணவர்கள் கடுமையான காயங்களை அடைந்ததுடன், அவர்கள் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், தாக்குதல் நடத்தியோர் முகாமைத்துவப் பீடத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளங்காணப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.[19]

### 19. போராட்டமொன்றைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டை ஏவினர்




*பிரதிமை 12: கட்டுவானையில் பாதுகாவலிலான மரணத்திற்கு எதிரான போராட்டம் - புகைப்பட அனுசரணை - www.hirunews.lk*

---

[18] http://colombogazette.com/2018/11/22/tense-situation-involving-anti-raggers-of-peradeniya-uni/ (கடைசியாக டிசம்பர் 15 அன்று அடையப்பட்டது)

[19] http://www.hirunews.lk/206916/two-students-of-wayamba-university-assaulted-for-objecting-ragging (கடைசியாக டிசம்பர் 30 அன்று அடையப்பட்டது)

டிசம்பர் 12 அன்று, கட்டுவான பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் நடைபெற்ற போராட்டமொன்றின் மீது கண்ணீர் புகைக்குண்டுகளைப் பொலிசார் ஏவினர் என அறிக்கையிடப்பட்டுள்ளது. பொலிஸ் பாதுகாவலில் ஆடவர் ஒருவரைப் பொலிஸார் கொன்றதாகப் போராட்டங்காரர்கள் குற்றஞ்சாட்டினர். ஆனால், குற்றச்சாட்டினைப் பொலிஸார் மறுத்துள்ளனர். பொலிஸ் நிலையத்தின் முன்னால் நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடியதுடன், 'ரயர்'களை எரித்து, போராட்டத்தை ஆரம்பித்தனர். பொலிஸாரின் கூற்றுப்படி, பொலிஸாரை நோக்கி போராட்டக்காரர்கள் கற்களை எறிந்துள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப்படை அழைக்கப்பட்டதுடன், போராட்டத்தைக் கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளையும் பயன்படுத்தினர்.[20]

## 20. உயர்பதவிநிலை விசாரணையாளர் இடமாற்றப்பட்டார்



*பிரதிமை 13: பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த டீ சில்வா - புகைப்பட அனுசரணை - www.dailymirror.lk*

உடனடியாகச் செயற்படத்தக்கதாக, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் (சி.ஐ.டி.) பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த டீ சில்வா நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. சி.ஐ.டி.இன் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றங்கள் விசாரணை அலகின் பொறுப்பதிகாரியாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் சில்வா விளங்குவதுடன், செய்திப்பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை மற்றும் சில கடற்படை அலுவலர்களினால் சார்த்துரைக்கப்பட்டுள்ள கொழும்பில் 11 இளைஞர்களின் ஆட்கடத்தல் ஆகியன உட்பட சில முக்கியமான விசாரணைகளை அவர் கையாண்டார். எல்.ரி.ரி.ஈ.இனால் இழைக்கப்பட்ட 60க்கு மேற்பட்ட குற்றங்கள் உட்பட பெருமளவு விசாரணைகளை அவர் வெற்றிகரமாக முடித்துள்ளார். "சேவைக்கான தேவைப்பாடு" ஒன்று என திடீர் இடமாற்றம் நியாயப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகங்களின் கூற்றுப்படி, எல்.ரி.ரி.ஈ.உடன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த தொடர்பினைக் கொண்டிருந்தார் என இளைஞர்களின் ஆட்கடத்தல் வழக்கில் முக்கியமான சந்தேகநபர் ஒருவருக்கு புகலிடம் அளித்ததில் சம்பந்தப்பட்டுள்ளதாகச் சார்த்துரைக்கப்பட்டுள்ள பிரதம பாதுகாப்பு அதிகாரி ரவீந்ரா விஜேகுணரத்ன பொருள்படுத்தி, இந்த இடமாற்றத்தைத் தூண்டியுள்ளார். எனினும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்தவுக்கு எதிரான சார்த்துரைகளை சி.ஐ.டி.இன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மறுத்துரைத்தார். ஜனாதிபதியின் உத்தரவுகள் மீதான அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்டது என ஊடக அறிக்கைகள் எடுத்துக்காட்டியிருந்தன. ஊடகங்களின் வெளிப்படுத்தலினதும், கடுமையான விமர்சனங்களினதும் பின்னர் இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டது.[21]

[20] http://colombogazette.com/2018/12/13/police-fire-tear-gas-on-mob-near-katuwana-police-station/ (கடைசியாக டிசம்பர் 10 அன்று அடையப்பட்டது)

[21] http://www.dailymirror.lk/article/Transfer-of-CID-s-IP-Nishantha-Silva-cancelled-158630.html, http://www.dailymirror.lk/158572/CID-s-IP-Nishantha-Silva-transferred, http://www.lankatruth.com/en/2018/11/letter-by-igp-proves-ip-nishantha-silva-was-transferred-by-president-sirisena/ (கடைசியாக டிசம்பர் 20 அன்று அடையப்பட்டது)

## ஈ. அரசியலமைப்பு சதிப்புரட்சியின் பின்னரான அடக்குமுறைகள்

ஊடகச் சுதந்திரத்திற்கு, விசேடமாக அரச ஊடக நிறுவனங்களின் சுதந்திரத்திற்கு அச்சுறுதல்களின் அதிகரிப்பினை ஒக்ரோபர் 26இன் அரசியலமைப்புச் சதிப்புரட்சி கண்டது. முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகளை உள்ளடக்குவதிலிருந்து ஊடகங்கள் தடுக்கப்பட்டன. விசேடமாக ஜனாதிபதிக்கு எதிராக நிலையொன்றை எடுத்த சபாநாயகருக்கு எதிராக பாராளுமன்றத்தில் வன்முறையைக் காலம் கண்டதுடன், இந்தச் சம்பவங்கள் பாராளுமன்றத்தில் உள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொலிசாருக்கும் காயங்களுக்கு இட்டுச்சென்றன. சதிப்புரட்சியை எதிர்த்த ஒரு முக்கியமான சிவில் சமூகச் செயலார்வலர் பத்திரிகை மகாநாடு ஒன்றில் செய்த கருத்துரைகள் மீதான அடிப்படையில் விசாரணைகள் உட்பட்டதுடன், அவருக்கும் மற்றும் அரசாங்கச் சார்பற்ற தாபனங்களுக்கும் மறுதலையிலான மேற்கோள்களை ஜனாதிபதியும் செய்துள்ளார். வண்ணாத்திப்பூச்சிகளினால் நிருவகிக்கப்படும் ஒன்றாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் குறிப்பிட்டு பெண் ஓரினச்சேர்க்கையாளர் - ஆண் ஓரினச்சேர்க்கையாளர் - ஈரினச்சேர்க்கையாளர் - மாற்றுப்பாலினத்தவர் - இருபால் உடலமைப்பினர் - பால்நிலைக் குழப்பத்திலுள்ளவர் (LGBTIQ) சமூகத்தை நிந்திப்பதற்கான கருத்துரைகளையும் ஜனாதிபதி செய்தார். LGBTIQ சமூகத்தை நிந்திப்பதற்காக வண்ணாத்திப்பூச்சிகள் என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது.

### 21. அரசாங்க ஊடக நிறுவனங்களில் அரசியல்வாதிகள் பலாத்காரமாகப் பிரவேசிக்கின்றனர்




*பிரதிமை 14: ராஜபக்ஷவின் ஆதரவாளர்களின் குழுவைக் கட்டுப்படுத்த பொலிஸின் விசேட அதிரடிப்படை முயல்கின்றது - சனத் நிஷாந்த, பிரசன்ன ரணவீர மற்றும் ரொஜர் செனவிரத்ன ஆகியோர் உட்பட பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் பிரதிநிதிகள் படத்தில் உள்ளனர் - புகைப்பட அனுசரணை - www.lankadeepa.lk*

ஒக்ரோபர் 26 இரவு அன்று, பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி நியமிக்கப்பட்ட பின்னர், சில மணித்தியாலங்களில் ஸ்ரீ லங்கா ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினுள் பிரவேசிப்பதற்கு இரு பாரிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் முயற்சித்தனர். கலைக்கப்பட்ட அமைச்சரவையின் அமைச்சர்களான மங்கள சமரவீர, ரஞ்ஜித் மத்துமபண்டார ஆகியோர் தாம் ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சத்துர சேனாரத்னவுடன் வளாகத்திற்கு வந்த போது, கெஹலிய ரம்புக்வெல, சனத் நிஷாந்த, இந்திக அனுருத்த மற்றும் பிரசன்ன ரணவீர போன்ற சில பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களுக்கு இடையில் சிக்கியதை வலியுறுத்தியதாக ஊடகங்கள் அறிக்கையிட்டன. இந்தச் சூழ்நிலையில், கெடுபிடி சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸின் விசேட அதிரடிப்படை வரவழைக்கப்பட்டதுடன், முதன்மையான அரசாங்கத் தொலைக்காட்சி நிலையம் அதன் தலைவரினதும், வேறு

அதிகாரிகளினதும் கட்டுப்பாட்டிலிருந்து விலகியிருந்தது. அறிக்கையொன்று விடுப்பதற்கு கலைக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதுடன், ராஜபக்ஷ சார்பு ஆதரவாளர்களால் ரூபவாஹினி கட்டுப்பாட்டுக்குள் எடுக்கப்பட்டிருந்தது.[22]

## 22. அரசாங்க ஊடகங்களின் இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு, வெளியேற்றப்பட்டனர்

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்ட பின்னர் லேக் ஹவுஸ், தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (ஸ்ரீ.ல.ரூ.கூ.) மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலைப்பின்னல் (ஐ.ரி.என்) போன்ற அரசாங்க ஊடக நிறுவனங்களின் பெருமளவு இதழியலாளர்கள், நிருவாகிகள் மற்றும் வேறு பணியாளர் ஆகியோர் அச்சுறுத்தப்பட்டு, தடுக்கப்பட்டு, அவர்களது பதவிநிலைகளில் இருந்து பலாத்காரமாக நீக்கப்பட்டனர். லேக் ஹவுஸ் மூலங்களின் பிரகாரம், மறுநாளான ஒக்ரோபர் 26இல் செய்திப்பத்திரிகைகளின் தளக்கோலங்களை ராஜபக்ஷ ஆதரவாளர்களின் குழு பலாத்காரமாக மாற்றியுள்ளது. தனது பதிப்புரிமைக் கடமைகளை அவரால் செய்ய இயலாமல் இருந்ததினால், வார இறுதி செய்திப்பத்திரிகைகளின் பணியாளரும் வெளியிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.[23] இதனிடையே, ஐ.ரி.என்.இன் செய்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதிப் பொது முகாமையாளர் சுபாஷ் ஜயவர்தன உட்பட பெருமளவு இதழியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற தகவலைப் பெற்ற பின்னர் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். ஒக்ரோபர் 28 (ஞாயிற்றுக்கிழமை) அன்று, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் அத்துடன் ஐ.ரி.என்.இன் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரும் ஒக்ரோபர் 26 இரவிலிருந்து நிறுவனங்களில் இருக்கவில்லை என ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன.

## 23. லேக் ஹவுஸினுள் பலாத்காரமாகப் பிரவேசிப்பதற்கு ஐ.தே.க. ஆதரவாளர்கள் முயற்சித்தனர்

டிசம்பர் 13 அன்று, அரசாங்கத்திற்குச் சொந்தமான அச்சு ஊடக நிறுவனமான லேக் ஹவுஸூக்கு பலாத்காரமாகப் பிரவேசிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி (ஐ.தே.க.) ஆதரவாளர்களின் குழு முயன்றது. INFORMக்கு பணியாட் உறுப்பினர்களினால் தெரிவிக்கப்பட்டவாறு, பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும் அத்துடன் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு அழைப்புவிடுப்பதற்கும் என ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானது என மீஉயர் நீதிமன்றம் அறிவித்த பின்னர் சம்பவம் இடம்பெற்றது. ஊடகங்களின் கூற்றுப்படி, இரு ஐ.தே.க. உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளும் அத்துடன் அவர்களது ஆதரவாளர்களும் லேக் ஹவுஸில் பிரவேசிப்பதற்கு முயற்சித்துள்ளனர். ஆனால், பொலிஸாரின் ஆதரவுடன் நிறுவனத்தின் பணியாட் உறுப்பினர்களினால் அவர்கள் தடுக்கப்பட்டனர். எனினும், இது விசாரணையொன்றுக்கு வாக்குறுதியளித்த ஐ.தே.க.இனால் சுட்டிக்காட்டப்பட்டது.[24]

## 24. பிரதமரினதும், அமைச்சரவையினதும் சத்தியப்பிரமாண நிகழ்வினை உள்ளடக்குவதிலிருந்து ஊடகங்கள் தடுக்கப்பட்டன

அரசியல் கொந்தளிப்பின் பின்னர், பிரதமராக ரணில் விக்ரமசிங்க மீள்-நியமிக்கப்பட்டதுடன், டிசம்பர் 16 அன்று ஜனாதிபதி அலுவலகத்தில் அவரது சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது. டிசம்பர் 20 அன்று அலுவலகத்தில் புதிய அமைச்சரவையின் சத்தியப்பிரமாணம் இடம்பெற்றது. இரு தருணங்களிலும், சத்தியப்பிரமாண நிகழ்வுக்கு ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை என INFORMக்கு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பெருமளவு பதிப்பாசிரியர்கள் தெரிவித்தனர். இவ்வாறு தடுக்கப்பட்டதை சுதந்திர ஊடக இயக்கம் உட்பட சில தாபனங்கள் கண்டித்ததுடன், தகவலுக்கும் அத்துடன் ஊடக சுதந்திரத்திற்குமான உரிமையின் மீறலொன்று என அவை தெரிவித்தன.[25]

---

22 http://srilankabrief.org/2018/10/sri-lanka-slpp-loyalists-forcibly-take-over-state-media-institutions/ (கடைசியாக டிசம்பர் 15 அன்று அடையப்பட்டது)

23 https://mobile.twitter.com/tingilye/status/1056201659557113856 (கடைசியாக டிசம்பர் 29 அன்று அடையப்பட்டது)

24 https://srilankamirror.com/news/12021-unp-condemns-violence-outside-lake-house (கடைசியாக டிசம்பர் 16 அன்று அடையப்பட்டது)

25 https://www.colombotelegraph.com/index.php/media-barred-from-covering-ranil-wickremesinghe-swearing-in-president-worried-about-humiliation-caused-by photograph/, https://freemediasrilanka.wordpress.com/2018/12/31/%E0%B6%85%E0%B6%9C%E0%B6%B8%E0%B7%90%E0%B6%AD%E0%B7%92%E0%B6%AF%E0%B7%92%E0%B7%80%E0%B7%94%E0%B6%BB%E0%B7%94%E0%B6%B8%E0%B7%8A-%E0%B6%AF%E0%B7%93%E0%B6%B8%E0%B7%9A-%E0%B6%85%E0%B7%80%E0%B7%83/ (கடைசியாக டிசம்பர் 16 அன்று அடையப்பட்டது)

## 25. பாராளுமன்றத்தில் சபாநாயகர் தாக்கப்பட்டார்



*பிரதிமை 15: சபாநாயகர் அமர்ந்திருந்த பகுதியைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்குகின்றனர் (இடது) தாக்குதல்களில் இருந்து சபாநாயகரைப் பாதுகாப்பதற்கு பொலிஸாரும், பாராளுமன்ற அலுவலர்களும் முயல்கின்றனர் - புகைப்பட அனுசரணை - Reuters*

நொவம்பர் 15இலும், 16இலும் நடைபெற்ற இரு பாராளுமன்ற அமர்வுகளில் சபாநாயகர் கரு ஜயசூரிய தாக்கப்பட்டார். நொவம்பர் 15 அன்று, பாராளுமன்ற அமர்வுகளை ஆரம்பிப்பதற்கு முயற்சித்த வேளை முதலாவது சம்பவம் இடம்பெற்றது. டிலும் அமுனுகம, ஆனந்த அளுத்கமகே, திலங்க சுமதிபால, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் அத்துடன் முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவையும் ஆதரிக்கின்ற உறுப்பினர்களும் அத்துடன் பெருமளவு ஏனையோரும் சபாநாயகரை நோக்கிவந்து, தாக்குதலை ஆரம்பித்தனர். எனினும், சபாநாயகரை ஐ.தே.க.ஐயும் அத்துடன் வேறு சிறுபான்மை கட்சிகளையும் சேர்த்து உறுப்பினர்கள் சுற்றிவளைத்து, அவரைப் பாதுகாப்பதற்கு முயன்றனர். நொவம்பர் 16 அன்று, முன்னாள் ஜனாதிபதியும், பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக்களுக்காக சபாநாயகர் பாராளுமன்றத்தினுள் பிரவேசித்து, தலைமைதாங்கிய வேளை அடுத்த தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. ஜனாதிபதி சிறிசேன மற்றும் ராஜபக்ஷ ஆகியோருக்கு ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர்களினால் சபாநாயகரின் ஆசனம் தடுக்கப்பட்டது. எனினும், பொலிஸாரின் பாதுகாப்புடன் மேலதிகமான கதவொன்றைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தினுள் சபாநாயகர் பிரவேசித்தார். நூல்கள், நாற்காலிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி சபாநாயகரைத் தாக்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று ஆரம்பித்தது. இதனிடையே, சில ஐக்கிய தேசிய முன்னணி (ஐ.தே.மு.) மற்றும் ஜே.வி.பி. (ஜனதா விமுக்தி பெரமுன - மக்கள் விடுதலை முன்னணி) ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் பொலிஸாரும் மிளகாய்த் தூளுடன் நீர், நூல்கள் மற்றும் நாற்காலிகள் ஆகியனவற்றைப் பயன்படுத்தி குழுவினால் தாக்கப்பட்டனர். சில ஐ.தே.மு. பாராளுமன்ற உறுப்பினர்களும் மூர்க்கத்தனமாக நடந்ததாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.[26]

## 26. பாராளுமன்ற அமர்வுகளின் நேரடி ஒலிபரப்பினை ஊடகங்கள் நிறுத்தின

பாராளுமன்ற அமர்வுகளின் நேரடி ஒலிபரப்பு சடுதியாக நிறுத்தப்பட்டது பற்றி விசாரிப்பதற்காக டிசம்பர் 5 அன்று வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டிஆரச்சி மற்றும் இலங்கை ஒலிபரப்புக்

[26] https://www.slguardian.org/sri-lanka-speaker-under-attack-by-sirisena-rajapaksa-goons-in-the-house/, http://dbsjeyaraj.com/dbsj/archives/61712, https://www.timeslive.co.za/news/world/2018-11-16-chilli-powder-thrown-as-sri-lankan-mps-brawl-again/, (கடைசியாக டிசம்பர் 15 அன்று அடையப்பட்டது)

கூட்டுத்தாபனத்தின் (இ.ஒ.கூ.) தலைவர் சோமரத்ன திசநாயக்க ஆகியோரைப் பாராளுமன்றத்திற்கு சபாநாயகர் கரு ஜயசூரிய வரவழைத்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பாராளுமன்ற அமர்வுகளின் நேரடி ஒலிபரப்புக்கு பாராளுமன்றத்திற்கும் இ.ஒ. கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் உடன்படிக்கையொன்று உள்ளது. எனினும், நொவம்பர் 14 அன்று இ.ஒ.கூட்டுத்தாபனத்தினால் நேரடி ஒலிபரப்பு சடுதியாக நிறுத்தப்பட்டது. இது உடன்படிக்கையை வெளிப்படையாக மீறுகின்றது என்றும், இ.ஒ. கூட்டுத்தாபனத்திற்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சில ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரச்சனை எழுப்பப்பட்டது. மூன்று தடவைகள் அழைப்பாணைகள் உதாசீனம் செய்யப்பட்டன. ஆனால், இறுதியாக சபாநாயகர் முன்னிலையில் இருவரும் முன்னிலையாகி, நேரடி ஒலிபரப்பை ஆரம்பிப்பதற்கான வாக்குறுதியை அளித்தனர்.[27]

## 27. பொலிஸாரினால் சிவில் சமூகத் தலைவர் வரவழைக்கப்பட்டு, எச்சரிக்கப்பட்டார்



*பிரதிமை 16: சமன் ரத்னபிரிய - புகைப்பட அனுசரணை - www.dailymirror.lk*

முன்னணிவாய்ந்த சிவில் சமூகச் செயலார்வலரும், தொழிற்சங்கத் தலைவருமான சமன் ரத்னபிரிய பத்திரிகை மகாநாடொன்றின் போது வழங்கிய கருத்துரையொன்று குறித்து விசாரிப்பதற்காகப் பொலிஸாரினால் வரவழைக்கப்பட்டார். சமன் ரத்னபிரியவின் கருத்துரைகள் தேசியப் பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தல் என்றும் ஜனாதிபதிக்கு மரண அச்சுறுத்தல் என்றும் அவருக்கு எதிராக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரினால் செய்யப்பட்ட முறைப்பாடொன்றுக்கான பதிலிறுப்பில் இது சார்த்துரைக்கப்பட்டிருந்தது. முறைப்பாட்டினைத் தொடர்ந்து, பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தல்களின் கீழ் பொலிஸ் விசேட விசாரணை அலகினால் விசாரணைகள் ஆரம்பமாகின. சமன் ரத்னபிரிய, பத்திரிகை மகாநாட்டில் பங்கெடுத்த அவரது சகபாடிகளும், சக செயலார்வலர்களுமான பேராசிரியர் சரத் விஜேசூரிய மற்றும் காமினி வியாங்கொட ஆகியோரிடமிருந்து இரண்டரை மணித்தியாலத்திற்கு மேலாக வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டன.[28]

---

27 http://www.dailynews.lk/2018/12/06/political/170518/speaker-summons-media-secretary-slbc-chairman, http://colombogazette.com/2018/12/05/speaker-karu-jayasuriya-slams-slbc-chief/ (கடைசியாக டிசம்பர் 16 அன்று அடையப்பட்டது)

28 https://www.newsfirst.lk/2018/12/14/saman-rathnapriya-provides-statement-to-the-police-special-investigation-unit/,http://colombogazette.com/2018/12/11/probe-launched-into-comments-made-by-saman-ratnapriya/,http://www.hirunews.lk/205948/police-to-investigate-saman-rathnapriya-on-his-statement-that-threatens-national-security (கடைசியாக டிசம்பர் 16 அன்று அடையப்பட்டது)

## 28. LGBTIQ சமூக மீதான மறுதலையிலான கருத்துக்களை ஜனாதிபதி செய்தார்

பெண் ஓரினச்சேர்க்கையாளர் - ஆண் ஓரினச்சேர்க்கையாளர் - ஈரினச்சேர்க்கையாளர் - மாற்றுப்பாலினத்தவர் - இருபால் உடலமைப்பினர் - பால்நிலைக் குழப்பத்திலுள்ளவர் [Lesbian – Gay – Bisexual – Transgender – Intersex – Queer (LGBTIQ)] சமூகம் மீதான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்துரைகள் குறித்து பெருமளவு தாபனங்கள் அவர் மீது ஆத்திரமடைந்தன. நொவம்பர் 5 அன்று, ஐக்கிய பொதுஜன மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டத்தில் "வண்ணாத்திப்பூச்சி வாழ்க்கை" ஒன்றை பிரதமர் ரணில் விக்ரமசிங்க வாழ்வதாகவும், அவரது "வண்ணாத்திப்பூச்சி செயற்குழுவில்" அரசாங்கத் தீர்மானங்கள் எடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இது LGBTIQ சமூகத்தினாலும், ஏனையவற்றினாலும் கருத்துரைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கும் அத்துடன் "ஜனநாயகத்திற்கான வண்ணாத்திப்பூச்சிகள்" எனப் பெயரிடப்பட்ட குழுவொன்றின் அமைப்புக்கும் இட்டுச்சென்றது.[29]




*பிரதிமை 17: ஜனாதிபதியின் ஓரினச்சேர்க்கை கருத்துரைகளுக்கும் அத்துடன் நடைமுறையிலான அரசியல் நெருக்கடிநிலைக்கும் எதிராக LGBTIQ சமூகத்தினரும் மற்றும் ஏனையோரும் போராடுகின்றனர் - புகைப்பட அனுசரணை - bakamoono.lk*

[29] http://colombogazette.com/2018/11/06/president-under-fire-over-butterfly-comments/ (கடைசியாக டிசம்பர் 15 அன்று அடையப்பட்டது)